ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1961/6 - 2016 අප්‍රේල් මස 05 වැනි අඟහරුවාදා - 2016.04.05

*1961/6 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 05 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**மதுவரி அறிவித்தல்**

காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறு, (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அதே சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் கௌரவ நிதி அமைச்சர் அவர்களுக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் 2015, திசெம்பர் மாதம் 16 ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறும் வகையில் விதிக்கப்பட்ட 2015.12.15 ஆந் திகதிய 1945/8 ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள கீழே காட்டப்பட்டுள்ள கட்டளை 2016.03.10 ஆந் திகதியன்று பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஆர். எச். எஸ். சமரதுங்க,<br>செயலாளர்,<br>நிதி அமைச்சு.

நிதி அமைச்சு,<br>கொழும்பு 01.<br>2016, ஏப்பிறல் 4.

**கட்டளை**

(1) வேறு ஏதேனும் மதுவரி அறிவித்தலில் உள்ளவற்றிக்கு முரணாக எது எவ்வாறிருப்பினும், ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட உற்பத்திசாலையிலிருந்து வழங்கப்பட்ட அல்லது ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வளவுகளில் சில்லறை விற்பனை மூலம் விற்கப்பட்ட விசேட சாராயம், பனஞ் சாராயம், தென்னஞ் சாராயம் அல்லது பதனிடப்பட்ட சாராயம் என்பவற்றின் செறிவு ஒவ்வொரு உற்பத்திப் பொருள் தொடர்பில் மதுவரி ஆணையாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட செறிவாகயிருத்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய செறிவு உற்பத்தியாளரினால் சுட்டுத்துண்டின் மீது சுட்டிக் காட்டப்படுகின்றதான அத்தகைய உற்பத்திப் பொருளின் முழுச் செறிவின் 20. 0% சதவீதத்திற்கு குறைவானதாகவும் 48. 5% இனைவிட உயர்வானதாகவும் இருத்தல் ஆகாது.

(2) உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட வெளிநாட்டு மதுபானம் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டு மதுபானம் என்பவற்றின் ஆகக்குறைந்த முழுச் செறிவு 37. 0% மாகவும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட வெளிநாட்டு மதுபானம் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டு மதுபானம் என்பவற்றின் ஆகக் கூடுதலான முழுச் செறிவு 50. 0% மாகவும் இருத்தல் வேண்டும்.

(3) பால் மற்றும் திராட்சை மது கலந்த பானத்தின் (பன்ச்) ஆகக் கூடுதலான முழுச் செறிவு 17.1 % ஆக இருத்தல் வேண்டும்.

(4) மருத்துவ வைனுக்கான ஆகக் கூடுதலான முழுச் செறிவு 20. 0% ஆக இருத்தல் வேண்டும்.

(5) உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மதுபானம் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட தானிய மதுபான வகையினம் என்பவற்றுக்கான ஆகக் கூடுதலான முழுச்செறிவு 4. 0% ஆகவும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மதுபானம் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட தானிய வகையிலான மதுபானம் என்பவற்றின் ஆகக் கூடுதலான முழுச் செறிவு 8. 8% ஆகவும் இருத்தல் வேண்டும்.

1928.06.01 ஆந் திகதிய வெளியிடப்பட்ட 176 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலின் III ஆம் பகுதியின் (14) ஆம் பிரிவு, 1985.08.13 ஆந் திகதிய மதுவரி அறிவித்தல் இல. 743 மற்றும் 1985.12.16 ஆந் திகதி வெளியிடப்பட்ட மதுவரி அறிவித்தல் இல. 749 என்பன இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றன.

4- 804



இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.